(2) தகவல் கோரல்—தொடர்ச்சி.

விஞக்கள், துணை விஞக்கள் முதலியவைபற்றிய

புள்ளிவிவரம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம்முடைய திரு. விநயகம் அவர்கள் காலையில் சில விளக்கங்கள் கேட்டார்கள். அது பற்றி இப்பொழுது கூறுகிறேன். இந்தத் தொடர் கூட்டம் 33 நாட்கள் நடைபெற்றிருக்கின்றன, உட்கார்ந்து நாம் நிகழ்ச்சியை நடத்திய நாட்கள்.

41-வது விதியின் கீழ் 223 அறிவிக்கைகளைக் கொடுத்திருந்தார்கள் உறுப்பினர்கள். அவைகளில் 103 அறிவிக்கைகளுக்கு அனுமதி தரப்பட்டன. 103 அறிக்கைகளில், 100 அறிக்கைகளுக்கு இங்கே அறிக்கைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. அந்த மூன்று அறிவிக்கைகளைப் பொறுத்த வரையிலும்கூட, அவைகளுக்கான அறிவிக்கைகளைக் கொடுத்த உறுப்பினர்கள் தாங்கள் அன்று வருவதற்கில்லை, பிறகு ஒரு நாள் எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லிவிட்டு, வராத போன காரணத்தினால் தான், அந்த மூன்று அறிக்கைகளும் கொடுக்கப்படாமல் விடப்பட்டன. ஆக, 41-வது விதியின்கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானங்களைப் பொறுத்தவரையில், 100-க்கு 100 அறிக்கைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

உறுப்பினர்கள் கொடுத்த விஞக்களைப் பொறுத்தவரையில், அனுமதிக்கப்பட்ட விஞக்களின் எண்ணிக்கை 2166. அது நீண்ட காலமாக இருந்து வருகிறது. அதிலே 554 விஞக்கள் இந்த அவையிலே கொண்டு வரப்பட்டு, விடை அளிக்கப்பட்டிருக்கின்றன. அதில் துணை கேள்விகள் மட்டும் 1,625 கேள்விகளுக்கு விடை அளிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் என்ற கணக்கில் பார்த்தால், ஒரு மணி நேரத்தில் மூல விஞக்கள், துணை விஞக்கள் ஆக 70 விஞக்களுக்கு விடை அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், யார் அதிகமாகத் துணை விஞக்கள் போட்டார்கள் என்பது பற்றி விவரம் சேகரிப்பதற்கு நேரம் இல்லை.

(மாண்புமிகு திரு. மு. கருணநிதி: எவ்வளவு மணி ?) பேரவை 165 மணி நேரம் நடந்திருக்கிறது.

பேரவையின் நிகழ்ச்சிகள், இன்று இந்த அளவில் முடிவுறுகிறது. மீண்டும் கூடும் நாள் குறிப்பிடாமல், பேரவையை ஒத்திவைக்கிறேன். வணக்கம்.

பின்னர் பேரவை, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டது. பிற்பகல் 1–21

7. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A.—*Statutory Rules and Orders.*

107. Notification issued with G.O. Ms. No. 800, Home, dated the 20th March 1968 in regard to exemption form payment of Tax leviable in respect of the vehicles bearing registration MSQ 2837 and MSQ 2841, belonging to the Co-operative for American Relief everywhere. (Laid on the Table of the House under section 11(2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931)].

B. *Reports, Notifications and other papers.*

Nil.